## ஜனவரி – 07 – பொதுக்கால 01ம் ஞாயிறு

### ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா

### அவர் உம் மக்களை நீதியோடு ஆள்வாராக!திபா. 72:2

---

**முதல் வாசகம் : ஏசாயா 60 : 1 - 6**

எருசலேமே எழு! ஒளிவீசு! உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது! இதோ! இருள் பூவுலகை மூடும் காரிருள் மக்களினங்களைக் கவ்வும் ஆண்டவரோ உன்மீது எழுந்தருள்வார் அவரது மாட்சி உன்மீது தோன்றும்! பிற இனத்தார் உன் ஒளிநோக்கி வருவர் மன்னர் உன் உதயக் கதிர்நோக்கி நடைபோடுவர். உன் கண்களை உயர்த்தி உன்னைச் சுற்றிலும் பார் அவர்கள் அனைவரும் ஒருங்கே திரண்டு உன்னிடம் வருகின்றனர் தொலையிலிருந்து உன் புதல்வர் வருவர் உன் புதல்வியர் தோளில் தூக்கி வரப்படுவர். அப்பொழுது, நீ அதைக் கண்டு அகமகிழ்வாய் உன் இதயம் வியந்து விம்மும் கடலின் திரள் செல்வம் உன்னிடம் கொணரப்படும் பிற இனத்தாரின் சொத்துகள் உன்னை வந்தடையும். ஒட்டகங்களின் பெருந்திரள் உன்னை நிரப்பும் மிதியான், ஏப்பாகு ஆகியவற்றின் இளம் ஒட்டகங்களும் வந்து சேரும் இளம் நாட்டினர் யாவரும் பொன், நறுமணப்பொருள் ஏந்திவருவர். அவர்கள் ஆண்டவரின் புகழை எடுத்துரைப்பர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் புரிகின்றனர்.

**இரண்டாம் வாசகம் : ஏபேசியர் 3 : 2 – 3, 5 – 6**

சகோதர சகோதரிகளே! உங்கள் நலனுக்காகக் கடவுளின் அருளால் எனக்களிக்கப்பட்ட பொறுப்பைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள் என எண்ணுகிறேன். அந்த மறைபொருள் எனக்கு இறை வெளிப்பாட்டின் வழியாகவே தெரியப்படுத்தப்பட்டது. அதைப்பற்றி நான் ஏற்கெனவே சுருக்கமாக உங்களுக்கு எழுதி யிருக்கிறேன். அதை நீங்கள் வாசிக்கும்போது, கிறிஸ்துவைப் பற்றிய மறைபொருளை நான் புரிந்து கொண்டேன் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். அந்த மறைபொருள் மற்ற தலைமுறைகளில் வாழ்ந்த மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இப்போது தூய ஆவி வழியாகத் தூய திருத்தூதருக்கும் இறைவாக்கினருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நற்செய்தியின் வழியாக, பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் என்பதே அம்மறை பொருள்.

**நற்செய்தி : மத்தேயு 2 : 1 - 12**

ஏரோது அரசன் காலத்தில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார். அப்போது கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து, யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம் என்றார்கள். இதைக் கேட்டதும் ஏரோது அரசன் கலங்கினான். அவனோடு எருசலேம் முழுவதும் கலங்கிற்று. அவன் எல்லாத் தலைமைக் குருக்களையும், மக்களிடையே இருந்த மறைநூல் அறிஞர்களையும் ஒன்று கூட்டி, மெசியா எங்கே பிறப்பார் என்று அவர்களிடம் விசாரித்தான். அவர்கள் அவனிடம் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் அவர் பிறக்க வேண்டும். ஏனெனில், யூதா நாட்டுப் பெத்லகேமே, யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை ஏனெனில், என் மக்களாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார் என்று இறைவாக்கினர் எழுதியுள்ளார் என்றார்கள். பின்பு ஏரோது யாருக்கும் தெரியாமல் ஞானிகளை அழைத்துக்கொண்டுபோய் விண்மீன் தோன்றிய காலத்தைப் பற்றி விசாரித்து உறுதி செய்து கொண்டான். மேலும் அவர்களிடம். நீங்கள் சென்று குழந்தையைக் குறித்துத் திட்டவட்டமாய்க் கேட்டு எனக்கு அறிவியுங்கள். அப்பொழுது நானும் சென்று அக்குழந்தையை வணங்குவேன் என்று கூறி அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பி வைத்தான். அரசன் சொன்னதைக் கேட்டு அவர்கள் புறப்பட்டுப் போனார்கள். இதோ! முன்பு எழுந்த விண்மீன் தோன்றிக் குழந்தை இருந்த இடத்திற்கு மேல் வந்து நிற்கும்வரை அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தது. அங்கே நின்ற விண்மீனைக் கண்டதும் அவர்கள் மட்டில்லாப் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். வீட்டிற்குள் அவர்கள் போய்க் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள் தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். ஏரோதிடம் திரும்பிப் போக வேண்டாம் என்று கனவில் அவர்கள் எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள்.

**தியானம் :** 2018ம் ஆண்டின் முதலாவது ஞாயிறு நாளில், ஆண்டவர் இயேசுவின் திருக்காட்சி எனப்படும் “பிற இனத்தாரின் திருவிழா”வைக் கொண்டாடுகின்றோம். எல்லாம் வல்ல இறைவனின் மீட்புத்திட்டத்தில் பேதமில்லை. அனைவரும் சமபங்காளிகள், அரசகுருத்துவத் திருக்கூட்டம் எனப்படும் உண்மையை நற்செய்தி (மத்தேயு2:1-12) உணர்த்துகின்றது. அன்று கிழக்கிலிருந்து ஞானிகள் விலையுயர்ந்த பரிசில்களோடு சென்று தெண்டணிட்டு வணங்கினாலும், இன்று மனிதர்களைத் தெண்டனிட்டு வழங்கும் நாம் எங்களைத் தேடி வந்த இறைவனைத் தேடிச் சென்று வணங்கத் தாயராக இருக்கின்றோமா? மனுவுரு எடுத்த இறைவன் தீர்ப்பின் கடவுளாக மறுபடி வரும்போது நாங்கள் எவ்வாறு எதிர்கொள்ள இருக்கின்றோம்?, ஏரோது போன்று வஞ்சகம் நிறைந்த குறுகிய நோக்கோடா? என்பதனை வேறுவிதமாகச் சிந்திக்க இன்றைய வாசகங்கள் எம்மை அழைக்கின்றன. தெய்வீகக் குழந்தையின் பிறப்புச்செய்தி வானதூதர் வாயிலாக இடையர்களுக்கு தெரிவிக்கப்பட்டுப் பின்னர், வானிலே விண்மீன் தோன்றி கிழக்கிலிருந்த ஞானிகள் வரைக்கும் விரைவாகச் சென்றடைந்ததாக நற்செய்தி தெரிவிப்பதால் (மத்தேயு2:1-12) தற்காலத்தைய தொடர்புச் சாதனங்களான ஈமெயில், ஸ்கைப், ருவிற்றர், வட்ஸ்அப் மற்றும் பேஸ்புக் போன்று குழந்தை இயேசுவின் காலத்திலேயே விஞ்ஞானம் வளர்ந்திருந்ததா? எனவும் வேறுவிதமாகச் சிந்திக்கலாம். எனினும், மூன்று ஞானிகள் நவீன வசதிகளற்ற நிலையில் மேற்கொண்ட நெடுந்தூரப்பயணம், அவர்களது தூய்மையான அர்ப்பணத்தை நிரூபிக்கின்றது. தமது பயணத்தின் இலக்கை அடைவோமா? என்று உறுதியாகத் தெரியாவிடினும் தாம் தேடிச்செல்லும் இறைவன் “அதைக்கண்டு அக மகிழ்வார்” (ஏசாயா60:5) என்ற நம்பிக்கையோடு அவர்களது பற்றுறுதிமிக்க விசுவாசத்தை அறிக்கையிடுகின்றது. எமது வாழ்விலும் பலவிதத்தினில் தமது உடனிருப்பை இறைமகன் வெளிப்படுத்துகின்றார். எனினும், இறைவன் எமக்கு வெளிப்படுத்தும் அடையாளங்களை நாம் சரிவரத் தெரிந்து, புரிந்து அர்ப்பன உணர்வோடு செயற்படுகிறோமா? ஆதலால், “கடவுளுக்குள் ஊழிகாலமாக மறைந்திருந்த இந்த மறைபொருளின் திட்டம்” (எபேசியர் 3:9) ஏற்கனவே வித்தியாச பேதமின்றி யாவருக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்வோம். ஆதியில் ஞானிகளை அழைத்தது போன்று எமது பரலோக தகப்பன் இன்றும் எமதருகில் வீற்றிருந்து “என்னண்டை வா…. என்னண்டை வா…என்னைத் தேடி வா” என அழைப்பு விடுக்கின்றார். மூன்று ஞானிகள் போன்று நாம் வெள்ளைப் போளமும், பொன்னும், சாம்பிராணியும் கொண்டு போகத் தேவையில்லை. மாறாக ஆண்டவன் எம்மிடம் எதிர்பார்ப்பது எமது வெள்ளை உள்ளம் மாத்திரமே. எமது இதயத்தை அவருக்கு திறந்து வைப்போம். ஆண்டவரண்டை நெருங்கிச் செல்ல தடையாகவுள்ள எமது பாவங்களுக்காக வருந்துவோம். ஆண்டவன் திருப்பாதம் நெடுஞ்சான் கிடையாய் விழுந்து தொழுவோம். தீர்ப்பின் கடவுளாக மறுபடி வரவிருப்பவரை மீட்பின் கடவுளாக எதிர்கொள்ள எம்மைத் தயார் செய்வோம்.